### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

# எரிசக்தித் திறனில் உச்சம் தொட்ட தமிழ்நாடு!

## மாநில எரிசக்தித் திறன் குறியீடு அமைப்பு தகவல்!

சென்னை, டிச.2-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 இல் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இந்தியாவில் தமிழ்நாடு நம்பர் 1 மாநிலம் எனும் இலக்கை அடைந்திடும் நோக்கில் பல்வேறு திட்டங்களை உருவாக்கி முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். அதன் பயனாக தமிழ்நாடு ஒவ்வொரு துறையிலும் அபரிமிதமான வளர்ச்சி கண்டு, இந்தியாவில் முன்னணி மாநிலமாக சிறந்து விளங்குகிறது. இதனை ஒன்றிய அரசினுடைய ஆய்வறிக்கைகள் அவ்வப்பொழுது வெளியிட்டு வருகின்றன. செய்தி ஊடகங்களும், செய்தி ஏடுகளும் கூட இந்த உண்மையை வெளிப்படுத்தி தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டின் தன்னிகரில்லா முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும் பாராட்டி வருகின்றன.

அந்த வகையில், தொழில்துறை எரிசக்தித் திறனில் தமிழ்நாடு இந்தியாவின் நம்பர் 1 மாநிலம் எனத் திகழ்வதாக மாநில எரிசக்தி திறன் குறியீடு (State Energy Efficiency Index -SEEI) அமைப்பு தெரிவித்துள்ளது.


**தொழில்துறை எரிசக்தி திறனில் உச்சம் தொட்ட தமிழ்நாடு**

தொழில்துறை எரிசக்தி திறனில் தமிழ்நாடு தேசிய அளவில் உச்சம் பெற்று மாநில ஆற்றல் திறன் குறியீடு (SEEI) 2024 இன் குழு 1 இல் 55.3 சதவீத மதிப்பெண்களுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது

ஆந்திரப் பிரதேசம் அளவீட்டுக் குறியீடுகளின்படி, நாட்டின் மிக உயர்ந்த முன்னேற்றத்தைப் பதிவு செய்து, 27.5சதவீத முன்னேற்றத்தைப் பதிவு செய்து, இரண்டாம் குழுவில் முன்னிலை வகிக்கிறது. 23.1சதவீதம் வளர்ச்சி பெற்று ஒடிசா , 28.8சதவீதம் வளர்ச்சி பெற்று சத்தீஸ்கர், 16.5சதவீதம் வளர்ச்சி பெற்று மத்தியப் பிரதேசம் 10.9 சதவீதம் வளர்ச்சி பெற்று திரிபுரா உள்ளிட்ட பல மாநிலங்களும் வலுவான முன்னேற்றத்தைப் படைத்துள்ளன.

**தொழில்துறை எரிசக்தி செயல்திறனில் மிகப்பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ள மாநிலங்கள் வரிசைப்படி:–**

| | | |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 55.3 சதவீதம் |
| 2 | சத்தீஸ்கர் | 29 சதவீதம் |
| 3 | ஆந்திரப் பிரதேசம் | 26 சதவீதம் |
| 4 | ஒடிசா | 23 சதவீதம் |
| 5 | மத்தியப் பிரதேசம் | 17 சதவீதம் |
| 6 | திரிபுரா | 11 சதவீதம் |




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தனித்தன்மையுடன் கூடிய முயற்சிகளின் பயனாக குழு 1 இல் உள்ள தமிழ்நாடு, கட்டுமானத் துறையில் ஆற்றல் திறன் முயற்சிகளை ஊக்குவிப்பதிலும், செயல்படுத்துவதிலும் முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது. மேலும், அதிக எண்ணிக்கையிலான சான்றளிக்கப்பட்ட பசுமை கட்டடங்களைக் கொண்ட முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் PEACE திட்டம் வாயிலாக 2023-24 ஆம் ஆண்டில் விழிப்புணர்வு, பயிற்சி, எரிசக்தி தணிக்கை மானியங்கள் ஆகியவற்றுடன் செயல்படுத்தல் முயற்சிகளுக்காக குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான ஆற்றல் திறன்களுக்காக மொத்தம் 2.6 கோடி ரூபாய் முதலீடு செய்து ஊக்கப்படுத்தியுள்ளது.

எரிசக்தி பாதுகாப்பு முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக, 25 மாநிலங்கள் எரிசக்தி பாதுகாப்பு விருதுகளைப் பெற்றுள்ளன. விருதுகளின் எண்ணிக்கையில் மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஒடிசா ஆகியவை முன்னணியில் உள்ளன. அடுத்த நிலையில் குஜராத் இடம்பெற்றுள்ளது.

---

# பெயர் மாற்றத்தை விட சிந்தனை மாற்றமே தேவை!

## ராஜ்பவன்களின் பெயர் மாற்றம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

**சென்னை, டிச.2**

**சட்டமன்றத்தை மதிக்காதவர்கள் ராஜ்பவன்களின் பெயரை 'மக்கள் மாளிகை' எனப் பெயர் மாற்றம் செய்வது கண்துடைப்பா என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்.**

மாநிலங்களில் உள்ள ராஜ்பவன்களின் பெயர் மாற்றம் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**பெயர் மாற்றத்தைவிடச் சிந்தனை மாற்றமே தேவை!**

**சட்டமன்றம் = மக்கள் மன்றம்! சட்டமன்றத்தை மதிக்காதவர்கள், "மக்கள் மாளிகை" எனப் பெயர் மாற்றுவது கண்துடைப்பா? மக்களாட்சித் தத்துவத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதற்கா?**

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளையும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற இறையாண்மையுள்ள சட்டமன்றத்தையும் மதிப்பதுதான் இப்போதைய தேவை!**

**சிந்தனையிலும் செயலிலும் மாற்றம் இல்லையெனில், இதுவும் தேவையற்றதே!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### 1000 பேருக்கு வேலைவாய்ப்பு:

# ரூ.611 கோடி முதலீட்டில் திருப்போரூரில் பொழுதுபோக்குப் பூங்கா திறப்பு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

**சென்னை, டிச. 2-**

**611 கோடி ரூபாய் முதலீல்டில் ஆயிரம்பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்ட பொழுதுபோக்கு பூங்காவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்.**

செங்கல்பட்டு மாவட்டம், இள்ளலூர் கிராமத்தில் 64.30 ஏக்கர் பரப்பளவில் 611 கோடி ரூபாய் முதலீட்டில் ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் வொண்டர்லா ஹாலிடேஸ் நிறுவனம் பொழுதுபோக்கு பூங்காவை அமைத்துள்ளது.

தனியார் பொழுதுபோக்கு பூங்காவை, தலைமைச் செயலகத்தில் இருந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், காணொலி மூலம் திறந்துவைத்தார். அப்போது தலைமைச் செயலாளர் முருகானந்தம் உடனிருந்தார்.

திருப்போரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தாரேஸ் அகமது, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் சினேகா, வொண்டர்லா ஹாலிடேஸ் செயல் தலைவர் அருண் கே.சிட்டிலப் பிள்ளி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

---

### தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒன்றிய பா.ஜ.க, அரசு புறக்கணிப்பது சரியா?

# நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் - தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் - ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்!

## வலைதளப்பதிவில் — முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, டிச.2-

நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்குகிற நிலையில்., முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விடுத்த சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டே, தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பது சரியா?**

**தமிழ்நாட்டின் கோரிக்கைகளை தேவைகளைக் கடிதங்களாக, நேரில் மனுக்களாக, சட்டமன்றத் தீர்மானங்களாக எடுத்துச் சொல்லியும் காதில் வாங்காமல் இருப்பது நியாயமல்ல!**

**அதிகமான வரி வருவாயைத் தரும் மாநிலமான தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்வதை மனச்சாட்சியுள்ள யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.**

**உங்கள் வஞ்சனைகளைக் கடந்துதான் நாட்டிலேயே அதிகமான 11.19% பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கிறோம்.**

**குட்ட குட்ட குனிய மாட்டோம்; நிமிர்ந்து நடைபோடுவோம்!**

**வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### மாநிலங்களவைத் தலைவர்

# எதிர்க்கட்சிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் திருச்சி சிவா உரை!



புதுடெல்லி, டிச.2-

ஜனநாயகம் என்பது பெரும்பான்மையானவர்களுக்கு மட்டும் உரியதல்ல. ஜனநாயகம் என்பது பெரும்பான்மையானவர்களுக்கு மட்டும் உரியதல்ல என்றும், எதிர்க்கட்சிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

**சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு வாழ்த்து!**

மேலும் மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு திருச்சி சிவா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாநிலங்களவையை வழிநடத்தும் பணிகளை நேற்று தொடங்கிய சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு வாழ்த்து தெரிவித்து மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், எதிர்க்கட்சிகளின் உணர்வுகளுக்கு மாநிலங்களவைத் தலைவர் மதிப்பளிக்க வேண்டும் என்றும், அவையின் பாதுகாவலரான சி.பி.ராதாகிருஷ்ணன் பாரம்பரியமான அவையின் மரபுகளை காப்பாற்றுவார் என எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

ஜனநாயகம் என்பது பெரும்பான்மையானவர்களுக்கு மட்டும் உரியதல்ல என்று குறிப்பிட்ட திருச்சி சிவா, இந்த அவையை மட்டுமல்ல, அவை உறுப்பினர்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, அவைத் தலைவருக்கு உள்ளது என்றும் கூறினார்.

---

### சுகாதாரப் பாதுகாப்புக்கான

# தேசிய பாதுகாப்பு கூடுதல் வரி மசோதா!

## மக்களவையில் தி.மு.க. சார்பில் டி.எம்.கதிர் ஆனந்த் அறிமுக நிலையில் எதிர்ப்பு!



*புதுடெல்லி, டிச. 2-*

*நாடாளுமன்ற மக்களவையில் சுகாதாரப் பாதுகாப்புக்கான தேசிய பாதுகாப்பு கூடுதல் வரி மசோதா> 2025 ஐ அறிமுகப் படுத்த ஒன்றிய அரசு முற்படும் போது அதற்கு அறிமுக நிலையிலேயே கடும் எதிர்ப்பு தெரிவித்து வேலூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் பேசியதாவது:-*

*ஒன்றிய அரசின் இந்த சுகாதாரப் பாதுகாப்புக்கான தேசிய பாதுகாப்பு கூடுதல் வரி மசோதா> 2025 மூலம் ஏற்கனவே விலை யேற்றம் மற்றும் பணவீக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள சாதாரண குடிமக்கள் பெரும் அவதிக்குள்ளாவர். அதனால் இந்த மசோதாவை அறிமுக நிலையிலேயே தி.மு.க. சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கிறேன் என்று தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோ.சி. மணி

## டிசம்பர் 2 (2016)



**தலைவர் கலைஞர் அவர்களால் 'தம்பி மணி' என பாசம் பொங்க அழைக்கப்பட்ட கழகத்தின் தளகர்த்தர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்த இவர், மிட்டா, மிராசுகள் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் ஒரு சாதாரண, தொண்டனாக திராவிட இயக்கக் கொள்கைகளையே தமது மூலதனமாகக் கொண்டு அதனை நெஞ்சில் ஏந்தி வலம் வந்தவர். சிறு வயது முதலே தன்னை இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்டு ஓயாது பணியாற்றிய உயரிய பண்புக்கும் – எளிமைக்கும் சொந்தக்காரர்.**

**தந்தை பெரியார் அவர்களின் மேடைப் பேச்சால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் இணைத்துக் கொண்ட இவர், கழகம் தொடங்கிய 1949–ஆம் ஆண்டிலேயே மேக்கிரி மங்கலம் கிராமக் கிளையின் பொருளாளராகவும் – மயிலாடுதுறை வட்டக்கிளைச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மண்டலப் பொறுப்பாளராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் கழகத்தை வளர்க்க ஓய்வறியாது பாடுபட்டவர்! தலைவர் கலைஞர் அவர்களின் சொல்லே அவருக்கு வேத வாக்கு எனச் செயல்பட்டவர்.**

**தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்காக மட்டுமின்றி, தமிழக விவசாயிகளுக்காகவும் போராட்டங்கள் பல நடத்தியதோடு மட்டுமல்லாமல், இவர் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**இவர் குடந்தை மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் சந்திரசேகர்புரம் கூட்டுறவு மொத்தவிற்பனைப் பண்டக சாலையின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**இவர் 1962, 1989, 1996, 2001, 2006 என ஐந்து முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1968–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இரண்டு முறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றினார். 1989, 2006 ஆகிய இரு முறை வேளாண்மைத் துறை அமைச்சராகவும் – 1996ல் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் திறம்படப் பணியாற்றியவர்.**

**2001ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்குப் பெரியார் விருதினை, தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.**

**"என்னரும் தளகர்த்தர் கோ.சி.மணி, எங்கோ போய்விட்டாரே!" என தலைவர் கலைஞர் இரங்கல் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**